**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**EP No. 44/2023 in OS.21/2011**

2025–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20–ம் நாள் வியாழக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 20.11.2025 | | |
| பெயர்: | திருமால்<br>(PW–1 Chief ) | தகப்பனார் பெயர்: | ராமையன் |
| கிராமம்: | புதுப்பட்டிணம் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | தனியார்பணி | வயது : | 61 /2025 |

**முதல் விசாரணை : 20.11.2025**

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். என்னுடைய சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. 23.09.2020–ம் தேதியிட்ட புதுப்பட்டிணம் காவல் நிலைய முதல் தகவலறிக்கை எண் 577/2020–ன் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ 1** ஆகவும்,

2. 23.09.2020–ம் தேதியிட்ட விபத்து பதிவேட்டின் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ 2** ஆகவும்,

3. புதுப்பட்டிணம் காவல் நிலைய முதல் தகவலறிக்கை எண் 577/2020–ன் 161(3) Cr.P.C சாட்சியங்களின் வாக்குமூலங்களின் (எண்ணிக்கை–6) சான்றிட்ட நகல் **ம.சா.ஆ 3** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.